**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கடலாடி.**

**முன்னிலை : திரு.S.சாதுசிவசுப்பிரமணியன், பி.ஏ.,பி.எல்.**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்**
**நீதித்துறை நடுவர், கடலாடி.**

**2026 ம் வருடம் ஜனவரி மாதம் 06 ம் நாள் செவ்வாய்கிழமை**

**I.A.No.28/2022**
**in**
**O.S.No.12/2022**

அ.சிங்கம் லியோன் ...மனுதாரர்/வாதி

/எதிர்/

1. இ.அலங்காரம் பர்னாந்து
2. அ.ஆஸ்டர்
3. அ.யோகேஷ்
4. இ.அருளானந்தம் சிங்கம் பர்னாந்து
5. அ.யோவான்
6. அ.சஞ்சாய்
7. பி.மிக்கேல்
8. பி.இன்னாசி சூசை ராஜா ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

(Amended as per order in I.A.No.59/2022, Dated : 17.08.2022)

இந்த இடைநிலை மனு என் முன்பாக 21.11.2025 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.B.பூமுருகன் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.H.முரளிதரன் அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 8 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.வேலுச்சாமி அவர்கள் ஆஜராகியும், தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இன்று வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

மனுதாரர்/வாதி தரப்பில் தாவா சொத்துக்களைப் பொறுத்து எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் வேறு நபர்களுக்கு விற்பனை எதுவும் செய்யக்கூடாது என இம்மனு முடியும் வரை தற்காலிகமாகவும், அசல் வழக்கு முடியும் வரை இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி கட்டளை 39 விதி 1, 2ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்.**

பிராது வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள ABCDA பகுதி சொத்தே தாவா சொத்து என்றும், தாவா சொத்தின் விஸ்தீரணம் 1 ஏக்கர் 69 ½ செண்ட் நிலமாகும். தாவாச் சொத்தில் 40 பனைமரங்களும் இருந்து வருவதாகவும், தாவா சொத்தாக காட்டப்பட்டுள்ள ABCDA பகுதி சொத்தும், தாவா சொத்தின் வடபுறம் கீழ்புறமுள்ள பிராது வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள AEFGHIJKLMNOPQCVA பகுதி சொத்து முழுவதும் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டதாகவும், பிரதிவாதிகள் தாவா சொத்தையும் அதன் வடக்குப்புறம் கிழக்குப்புறம் உள்ள சொத்துக்களையும் மனுதாரரிடம் கிரையம் வாங்கிக் கொள்ளும் படி கேட்டு அணுகியதால் பிராது வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள வடமேற்குப் பகுதியில் EA லைனை ஒட்டி கிழக்குப்புறம் இருந்த 2 ஏக்கர் 66 செண்ட் நிலத்தையும் அதில் இருந்த பனை விடலைகள், பனை மரங்களையும் சேர்த்து இவ்வழக்கில் கண்ட 7, 8 பிரதிவாதிகளுக்காகவும், அவருடைய தந்தையார் பிலவேந்திரன் மற்றும் பிலவேந்திரன் தனக்காகவும் சேர்ந்து கடந்த 20.08.1987ம் தேதி பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் மூலம் கிரையம் கொடுத்துள்ளதாகவும், அவ்வாறு கிரையம் கொடுக்கும்போது அவர்கள் கிரையம் கொடுத்த 2 ஏக்கர் 66 செண்ட் நிலத்திற்கு நான்குமால் சொல்லும் பொழுது வடக்கில் பிலவேந்திரன் வகையறாவினர் சொத்து இருப்பதாகவும், கிழக்கே சந்தியாகு சொத்து இருப்பதாகவும், தெற்கே ராயப்பன் லியோன், மைக்கேல் அம்மாள் புஞ்சை நிலம் இருப்பதாகவும், மேற்கே சந்த குரூஸ் புஞ்சை நிலம் இருப்பதாகவும் காட்டி கிரையம் கொடுத்துள்ளதாகவும், அவ்வாறு அவ்விடத்தில் 2 ஏக்கர் 66 செண்ட் நிலத்தை கிரையம் வாங்கிய மனுதாரரின் சொத்தை கிரையம் வாங்கிய தேதியிலேயே அடைந்து அன்றிலிருந்து இன்று வரை

அனுபவம் செய்து வருவதாகவும், 1ம் பிரதிவாதியும் அவர் மக்களும், கடந்த 01.07.1992ம் தேதி எனக்கு சரியான கிரைய தொகைக்கு கிரையம் கொடுத்து சொத்தையும் மனுதாரர் கைவச அனுபவத்தில் ஒப்படைத்து விட்டதாகவும், அன்றிலிருந்து இன்று வரை சொத்தை மனுதாரர் தனது கைவச அனுபவத்தில் வைத்து அனுபவம் செய்து வருவதாகவும், அந்த பகுதியில் சில சொத்துக்களை மட்டும் சில நபர்களுக்கு விற்பனை செய்துள்ளதாகவும், ஏற்கனவே பிராது வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள LM லைனுக்கு மேற்கே நான் 1ம் பிரதிவாதி வகையறாவினரிடம் கடந்த 01.07.1992ம் தேதி கிரையம் வாங்கிய 5 ஏக்கர் நிலத்திற்கு மேற்கே மேலும் 5 ஏக்கர் நிலத்தை இவ்வழக்கில் கண்ட 1ம் பிரதிவாதி தனது அண்ணன் மனைவியான அதாவது பிலவேந்திரன் மனைவியான அடைக்கலம்மாள் என்பவரிடம் கடந்த 02.07.1992ம் தேதி அதிகார ஆவணம் பெற்று எனக்கு கடந்த 03.07.1992ம் தேதி கிரையம் கொடுத்து சொத்தையும் எனது கைவச அனுபவத்தில் ஒப்படைத்து விட்டதாகவும், இவ்வழக்கில் கண்ட 1 முதல் 6 பிரதிவாதிகள் மேலே குறிப்பிடப்பட்டுள்ள 5 ஏக்கர் நிலத்திற்கு மேற்கே 5 ஏக்கர் நிலத்தை மனுதாரருக்கு கடந்த 07.11.1994ம் தேதி ஆவண எண்.865/1994 கிரைய ஆவணம் மூலமாக கிரையம் கொடுத்து சொத்தையும் மனுதாரர் கைவச அனுபவத்தில் ஒப்படைத்து விட்டதாகவும், அதே போல இவ்வழக்கில் கண்ட 1 முதல் 6 பிரதிவாதிகள் தாவா சொத்தான 1 ஏக்கர் 69 ½ செண்ட் நிலத்துடன் கூடிய வடபுறம் 80 ½ செண்ட் நிலம் சேர்த்து ஆக மொத்தம் 2 ஏக்கர் 50 செண்ட் நிலத்தை மனுதாரருக்கு கடந்த 08.11.1994ம் தேதி ஆவண எண்.878/1994 ஆவணம் மூலமாக கிரையம் கொடுத்து சொத்தையும் மனுதாரரின் கைவச அனுபவத்தில் ஒப்படைத்து விட்டதாகவும், சொத்துக்கு வடகிழக்குப்புறம் உள்ள 1 ஏக்கர் 64 செண்ட் நிலத்தை 4, 5 பிரதிவாதிகள் எனக்கு கடந்த 07.01.2000ம் தேதி ஆவண மூலமாக ஆவணம் என்.14/2000 சரியான கிரையத்தொகைக்கு கிரையம் கொடுத்து சொத்தையும் கைவச அனுபவத்தில் ஒப்படைத்து விட்டதாகவும், தாவா சொத்து உட்பட 21 ஏக்கர் 80 செண்ட் நிலத்தை நான் கிரையம் பெற்று என்னுடைய கைவச அனுபவத்தில் வைத்து அனுபவம் செய்து வருவதாகவும், 1ம் பிரதிவாதியின் தந்தையாரான இன்னாசி பர்னாந்து மற்றும் அவர்கள் சகோதரர்கள் சர்வே எண்.231ல் கண்ட சொத்தில் ஆக நடுப்புறம் வடபுறத்தல் 1ஏக்கர் 12½ செண்டு நிலத்தை ராயப்பன்

லியோன் என்பவருக்கு கடந்த 13.04.1955 ம் தேதி ஆவண எண்.716/1955 ஆவணம் மூலமாக கிரையம் கொடுத்துள்ளார்கள். அந்த கிரையத்தை 1 முதல் 6 பிரதிவாதிகள் எனக்கு கடந்த 08.11.1994 ம் தேதி எழுதிக் கொடுத்த கிரைய ஆவண எண்.808/1994 ஆவணத்தில் ஒப்புக்கொண்டுள்ளார்கள். ஏற்கனவே ராயப்பன் லியோன் அவர்களுக்கு 1ம் பிரதிவாதியின் தந்தை கிரையம் கொடுத்த சொத்துக்கு மேற்கிலும், தெற்கிலும், கிழக்கிலும் நான் கிரையம் வாங்கி அனுபவம் செய்து 21 ஏக்கர் 80 செண்ட் நிலத்தில் எனக்கு பாத்தியப்பட்ட பிராது வரைபடத்தில் தாவா எனக் காட்டப்பட்டுள்ள ABCDA பகுதி சொத்தானது மொத்த 1 ஏக்கர் 69% சொத்தின் தென்மேற்குப் பகுதியில் அமைந்துள்ள செண்டு நிலத்தைப் பொறுத்தே என்னுடன் பிரதிவாதிகள் தாவா செய்து வருகிறார்கள். தாவா சொத்தை பிரதிவாதிகள் எனக்கு கடந்த 08.11.1994 ம் தேதி பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் மூலமாக கிரையம் கொடுத்து தாவா சொத்தையும் இன்று வரை நான் எனது கைவச அனுபவத்தில் வைத்து அனுபவம் செய்து வரும் நிலையில் பிரதிவாதிகள் தங்கள் செல்வாக்கை பயன்படுத்தி பெயரளவுக்கு தாவா சொத்தைப் பொறுத்து வருவாய்த்துறை அதிகாரிகளை சரி செய்து தங்கள் பெயருக்கு பட்டா பெற்றிருப்பதாக ஊரில் பிரஸ்தாபித்து வருகிறார்கள். அவ்வாறு ஏதேனும் பிரதிவாதிகள் மோசடியாக ட்டா பெற்றிருந்தாலும் அதை வைத்து பிரதிவாதிகள், தாவர்சீ சொத்துக்கு எவ்வகையிலும் உரிமை கோர முடியாது. தாவா சொத்துக்கு 'மோசடியாக மாற்றிக்கொண்டு ஏற்கனவே தாவா சொத்தை எனக்கு கிரையம் கொடுக்கும் போது தாவா சொத்து தங்களுக்கு பாத்தியமில்லை என்றும், தற்போது தான் தங்கள் பெயருக்கு மோசடி பட்டா உள்ளது என்றும், எனவே தாங்கள் எனக்கு கடந்த 08.11.2004 ம் தேதி கிரையம் கொடுத்ததே செல்லாதது என்று பிரதிவாதிகள் கடந்த 06.03.2022 ம் தேதி வீணாக வாதியோடு பிரச்சனை செய்து தாவா சொத்துக்குள் அத்துமீறி நுழைய முயற்சி செய்துள்ளார்கள். அதனை நான் மிகவும் கஷ்டப்பட்டு தடுத்து வைத்துள்ளார். இந்நிலையில் பிரதிவாதிகள் தாவாச் சொத்தை வேறு யாருக்கும் விற்று வில்லங்கப்படுத்தினால் தங்களை என்னால் ஒன்றும் செய்ய முடியாது என்று கடந்த 06.03.2022 ம் தேதி என்னோடு சண்டையிட்டுள்ளார்கள். தாவா சொத்தை கடந்த 08.11.2004 ம் தேதி கிரையம் கொடுக்கும்போது பிரதிவாதிகளுக்கு தாவா சொத்து உரிமையில்லாமல் இருந்து தற்போது பிரதிவாதிகள் பிரஸ்தாபிப்பது போல பிரதிவாதிகள்

பெயருக்கு பிரதிவாதிகள் பெற்றுள்ள மோசடி பட்டா மூலமாக தற்போது தான் பிரதிவாதிகளுக்கு தாவாச் சொத்தைப் பொறுத்து உரிமை ஏற்பட்டுள்ளது என்று வைத்துக் கொண்டாலும் பிரதிவாதிகள் ஏற்கனவே எனக்கு எழுதிக்கொடுத்த 08.11.2004 ம் தேதி கிரைய ஆவணம் மூலமாக வாதி தாவாச் சொத்தைப் பொறுத்து உரிமையடைந்துள்ளதால் அந்த உரிமையை மறுக்க பிரதிவாதிகள் Doctrine of Estoppel– படி தடைபட்டுள்ளார்கள். பிரதிவாதிகளே தாவாச் சொத்தை எனக்கு கடந்த 08.11.2004 ம் தேதி பிரதிவாதிகள் கிரையம் கொடுத்து விட்டு தற்போது அதனை ஆட்சேபிக்க பிரதிவாதிகள் சட்டப்படியும் நியாயப்படியும் தடை பட்டுள்ளார்கள். அவ்வாறு பிரதிவாதிகள் ஆட்சேபனைகள் எதுவும் செய்யவும் முடியாது. பிரதிவாதிகள் கடந்த 06.03.2022 ம் தேதி எத்தனித்தது போல சட்ட விரோதமாக எனக்குப் பாத்தியப்பட்ட தாவாச் சொத்தை பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு ஏதேனும் செய்து விட்டாலோ அல்லது தாவாச் சொத்தை வேறு யாருக்கும் அக்கிரமமான முறையில் விற்பனை எதுவும் செய்துவிட்டாலோ அதனால் எனக்கு ஈடு செய்ய முடியாத பெருத்த கஷ்டம் நஷ்டம் ஏற்படக்கூடியதாக இருக்கிறது. எனவே பிரதிவாதிகளின் அக்கிரமச் செய்கையை சமூகம் நீதிமன்றத்தின் உத்திரவின் வாயிலாகவே தடுத்து நிறுத்த வேண்டியது அவசியமாக உள்ளது என்பதால் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>3) 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்.</u>**

மனுவில் கூறியுள்ள காரணங்கள் மறுக்கப்படுகிறது என்றும், பழைய சர்வே எண்.231 ல் கண்ட புதிய சர்வே எண் 230/1 எ ல் கண்ட தாவா சொத்து என்பது முழுக்க முழுக்க மோசடியானதாகும். மேற்படி சர்வே எண்கள் வெவ்வேறானதாக்கும் அது செட்டில் மென்ட்டு காலத்தில் இருந்தே தனி தனி சர்வே எண்களாக இருந்து வந்து தனிதனி பட்டாவாக நாளது தேதிவரை இருந்து வரும் சொத்தானது 1ம் பிரதிவாதி /1ம் எதிர்மனுதாரரின் தகப்பனார் ஆன இன்னாசி பர்னாந்துக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்தாகும். அவர் இறந்துவிட்டார் அவருக்கு 1ம் பிரதிவாதி –1, சிங்கம் –2, பிலவேந்திரன் –3 என்ற ஆண் மக்களும் பிலிமம்மாள் 4, பிளாஞ்அம்மாள் –5, ஜோன்ஸ்

- 6, ஆரோக்கிய பிரகாஷ் -7 ஆகியோர் வாரிசுகளாவார்கள், அதன் அடிப்படையில் பாகம் பிரிக்கப்படாத இன்னாசி பர்னாந்து வாரிசுகள் அனைவருக்கும் பாத்தியப்பட்ட சொத்தாக இருக்கும் போது உண்மையை மறைத்து இந்த பிரதிவாதிகள்/எதிர்மனுதார்களுக்கு மட்டும் பாத்தியப்பட்ட சொத்தாக பிராதில் வாதி குறிப்பிட்டுள்ளது தவறானதும். கிழக்குப்புறம் இருந்த 2 ஏக்கர் 66 சென்ட் நிலத்தையும் அதில் இருந்த பனை விடலைகள் பனை மரங்களையும் சேர்த்து இவ்வழக்கில் 7, 8 பிரதிவாதிகள் /எதிர்மனுதாரர்களுக்காக அவருடைய தந்தையான பிலவேந்திரன் தனக்காகவும் சேர்ந்து கடந்த 20.08.1987 ம் தேதி பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் மூலம் கிரையம் கொடுத்துள்ளார்கள் என்பதையும் வாதி/ மனுதார் தரப்பே கண்டிப்பாய் நிருபனம் செய்ய வேண்டும். அது உண்மையில்லை. அவ்வாறு ஏற்பட்டிருக்குமேயானால் அது மோசடியாக உற்பத்தி செய்யப்பட்ட கிரைய ஆவணமாகும். / பாகம் பிரிக்கப்படாத கூட்டு பாத்திய சொத்தில் மற்ற பாகஸ்தர்களின் உரிமையை மறைத்து கிரையம் பெறப்பட்டு இருக்குமேயானால் அந்த ஆவணத்தின் அடிப்படையில் எந்த ஒரு உரிமையோ பாத்தியமோ வாதி/மனுதாரருக்கு ஏற்படகூடியதில்லை. வாரிசுகள் இருக்கும் பொழுது பாகம் பிரிக்கப்படாத சொத்தில் ஒருவரிடம் மட்டும் வாதி/மனுதாரர் கிரையம் பெற்றதாகவும் அதன்மூலம் அன்றைய தினத்தில் இருந்து அனுபவம் செய்து வருவதாகவும் குறிப்பிட்டுள்ளது தவறானதும் தவறானது என்றும், வாதி/மனுதாரர் இந்த 1ம் பிரதிவாதி/1ம் எதிர்மனுதாரரின் மனைவியின் உடன் பிறந்தவர் ஆவார். அவர் தனக்கு பிழைக்க வழியில்லை என கூறி இந்த 1ம் பிரதிவாதி /1ம் எதிர்மனுதாரரின் லாஞ்சில் (படகு) கூலிக்கு வேலை பார்த்து வந்த நிலையில் தனக்கு தனியாக லாஞ்சு வாங்க வங்கியில் கடன் உதவி கோரியிருப்பதாகவும், அவர்கள் தர சம்மதம் தெரிவித்து இருப்பதாகவும் வங்கிக்கு பினை கொடுக்க வேண்டி இருப்பதால் 1ம் பிரதிவாதி/1ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியமான சொத்தினை அடமானமாக கொடுத்து உதவும் படியும் கூறி கேட்டதில் 1ம் பிரதிவாதி/1ம் எதிர்மனுதார் பாகம் பிரிக்கப்படாத சொத்தில் தான் எழுதி கொடுக்க இயலாது என கூறிய நிலையில் மற்ற பாகஸ்தரிடம் பாக விடுதலை பெற்றுவிடுவதாகவும் தனக்கு ஆவணம் என்று ஒன்று வேண்டும் என்பதால் கிரைய ஆவணம் எழுதிக்கொடுக்கும் படியும் மிக விரைவில் மறுகிரையம் செய்து கொடுப்பதாகவும் கூறி கேட்டதில்

உறவுமுறையை மனதில் வைத்து 1ம் பிரதிவாதி/1ம் எதிர்மனுதாரரும் அவர் வாரிசுகளும் மேற்படி ஆவணத்தை ஏற்படுத்தி கொடுத்தார்கள். ஆவணங்கள் அனைத்தும் இன்னாசி பர்னாந்து பெண் மக்கள் யாரும் எழுதிக்கொடுத்திருக்காததில் இருந்தே 1ம் பிரதிவாதி /1ம் எதிர்மனுதார் கூற்று உண்மையானது என்பதை தெளிவாக்கும். தற்சமயம் இன்னாசி பர்னாந்து பெண் மக்கள் தன் தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை மோசடியாக ஆவணம் மூலம் அடைந்த வாதி/மனுதாரருக்கு எதிராகவும் இந்த 1ம் பிரதிவாதி/1ம் எதிர்மனுதாரரை தரப்பினர்களாக சேர்த்தும் இன்னாசி பர்னாந்து பெண் மக்கள் பாக உரிமை கோரியும் மேற்படி மோசடி ஆவணங்களை இரத்து செய்யவும் நடபடி எடுத்து வருகின்றார்கள். வாதி/மனுதாரருக்கு எக்காலத்திலும் 21 ஏக்கர் 80 செண்ட் இடம் பாத்தியப்பட்டதல்ல. எக்காலத்திலும் அனுபவம் செய்யவில்லை. அதற்கு பட்டா பெற்று இருக்கும் பட்சம் அது மோசடியானதாகும். கிரையமே மோசடியானது என்ற அடிப்படையில் அதன்படி பெற்ற பட்டாவோ அதன் மூலம் அவர் செய்த கிரையமோ எவ்வித்திலும் செல்லதக்கதல்ல. உண்மையான பாத்தியஸ்தர் பெயரில் பட்டா இருப்பதால் அதில் எந்த ஒரு மோசடியும் ஏற்படுத்த வேண்டியது 1ம் பிரதிவாதி/1ம் எதிர்மனுதாரருக்கு இல்லை என்பதால் மனுவை தள்ளுபடி செய்யக்கோரி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>4) 2 முதல் 8 எதிர்மனுதாரர்கள்/2 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்.</u>

மனுவில் கூறியுள்ள காரணங்கள் மறுக்கப்படுகிறது என்றும், இன்றுவரை தாவா சொத்து எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகளின் பாத்திய அனுபவத்திலேயே நாளதுதேதிவரை இந்து வருகிறது என்றும், தாவா சொத்தான சர்வே எண் 230/1A என்பது பழைய உட்பிரிவு எண் 230/1 ஆகும். ஷை தாவா சொத்து ஆதியில் 1-ம் பிரதிவாதி அலங்காரம் பெர்னாந்து, 4-ம் பிரதிவாதி அருளாந்து சிங்கம், 7, 8 பிரதிவாதிகளின் தகப்பனாரான பிளவேந்தரனை பெற்ற இன்னாசி பர்னாந்துக்கு, பாத்திய அனுபவமாய் இருந்து வந்து, இன்னாசி பர்னாந்துக்கு பிறகு அவரின் ஆண் வாரிசுகளுக்கு கிடைக்கப்பெற்று, அவர்களின் பாத்திய, அனுபவத்தின் அடிப்படையில் தாவா சொத்தான சர்வே எண்.230/14-க்கு நிலஉடமைமேம்பாட்டு திட்டத்தில் ஷை லேட் இன்னாசி பர்னாந்து

மக்களான 1. பிளவேந்திரன், 2. அலங்காரம், 3. அருளாந்து சிங்கம் ஆகியோர்களுக்கு 10.6.1987-ல் 728-ம் நம்பர் பட்டா கொடுக்கப்பட்டு ஷை பிரதிவாதிகளின் பாத்திய, அனுபவத்தில் இருந்து வருகிறது. தாவா சொத்தின் சர்வே எண் 230/1A சொத்தானது இந்த பிரதிவாதிகள் மற்றும் இந்த பிரதிவாதிகளின் முன்னோர்கள் பாத்தியத்தில் இருந்து வந்தது என்பதை மறைத்து, வாதி பொய்யாக அனுபவத்தில் இருப்பதாக சொல்லி இவ்வழக்கை தாக்கல் செய்திருப்பதாகவும், தாவா சொத்தின் விஸ்தீரணம் 1 ஏக்கர் 96 ½ செண்டு நிலமாகும் என்பது மட்டும் உண்மை. வாதி பிராதுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும் சர்வே எண் 231/3A1 விஸ்தீரணம் 7.69.35 ஆகும். அது தான் வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும். பிராது வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள வடமேற்குப் பகுதியில் EA வைனை ஒட்டி கிழக்குப்புறம் இருந்த 2 ஏக்கர் 66 செண்ட் நிலத்தையும் அதில் இருந்த பனை விடலைகள், பனை மரங்களையும் சேர்த்து இவ்வழக்கில் கண்ட 7, 8 பிரதிவாதிகளுக்காகவும் அவருடைய தந்தையார் பிலவேந்திரன் மற்றும் பிலவேந்திரன் தனக்காகவும் சேர்த்து கடந்த 20.8.1987-ம் தேதி பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் மூலம் கிரையம் கொடுத்துள்ளார்கள் என்று கூறப்பட்டுள்ள சொத்தானது சர்வே எண் 231/3A1-ல் கண்ட சொத்தைத்தான் கிரையம் கொடுத்து இருக்கிறார். தாவா சொத்திற்கும் 1.7.1992-ம் தேதி கிரைய சொத்திற்கும் எவ்வித சம்மந்தமும் கிடையாது. 1 முதல் 6 பிரதிவாதிகள் மேலே குறிப்பிட்டுள்ள 5 ஏக்கர் நிலத்திற்கு மேற்கே 5 ஏக்கர் நிலத்தை வாதிக்கு கடந்த 7.11.1994-ம் தேதி ஆவண எண் 865/1994 கிரைய ஆவணம் மூலமாக கிரையம் கொடுத்து கொத்தையும் வாதியின் கைவச அனுபவத்தில் ஒப்படைத்துவிட்டார்கள் என்று கூறியிருக்கும் ஆவண எண் 865/1994 கண்ட சொத்தானது சர்வே எண் 231/3A1-ல் அடங்கும். தாவா சொத்திற்கு எந்த வகையிலும் கட்டுப்படுத்தக்கூடிய ஆவணம் கிடையாது. சொத்துக்கு வடகிழக்குப்புறம் உள்ள 1 ஏக்கர் 64 செண்ட் நிலத்தை 4, 5 பிரதிவாதிகள் வாதிக்கு கடந்த 7.1.2000-ம் தேதி ஆவண எண் 14/2000 ஆவணம் மூலமாக சரியான கிரையத்தொகைக்கு கிரையம் கொடுத்து சொத்தையும் வாதியின் கைவச அனுபவத்தில் ஒப்படைத்துவிட்டார்கள். கிரையம் வாங்கிய சொத்து சர்வே எண் 231/3A1-ல் தான் மற்றவர்களுக்கு கிரையம் கொடுத்து அனுபவத்து வருகிறார்கள் தாவா சொத்தான சர்வே எண் 230/1A இந்த பிரதிவாதிகளின் தனித்த

பாத்திய அனுபவத்தில் இருந்து வருகிறது. பிரதிவாதிகள் வாதிக்கு கடந்த 8.11.1994-ம் தேதி கிரைய ஆவண எண் 878/1994 ஆவணம் மூலமாக கிரையம் கொடுத்து சர்வே எண்.231/3A1 ஆகும். தாவா சொத்தை வாதிக்கு எந்த காலத்திலும் இந்த பிரதிவாதிகள் கிரையம் கொடுக்கவுமில்லை. பிரதிவாதிகள் தாவா சொத்தை வாதிக்கு கிரையம் கொடுத்துவிட்டு தற்போது தாவா சொத்து வாதியின் கைவச அனுபவத்தில் இருந்து வரும் நிலையில் பிரதிவாதிகள் தாவாசொத்தில் வாதியினுடைய உரிமையை மறுத்து வாதியோடு வீண் விவகாரம் செய்து வருவதால் தாவா சொத்தை பொறுத்து வாதியின் பாத்திய அனுபவங்களுக்கு ஈடு செய்ய முடியாத பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்பட்டுள்ளது என்று கூறியிருப்பது உண்மைக்குமாறானது. தாவா சொத்தை இந்த பிரதிவாதிகள் யாவரும் கிரையம் எழுதிக்கொடுக்கவில்லை என்பதால் மனுவை தள்ளுபடி செய்யக்கோரி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) இந்த இடைநிலை மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில் மனுதாரர் கோரியுள்ள பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதா? என்பதேயாகும்.

இம்மனுவில் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

5) இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. இம்மனுவில் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை.

அசல் வழக்கானது தாவா சொத்தானது வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து என விளம்புகை செய்தும், சொத்தில் வாதியின் அமைதியான அனுபவத்தை பிரதிவாதிகள் வகையறா எவ்வித தடையூறும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், தாவா சொத்தைப் பிரதிவாதிகள் யாருக்கும் விற்று வில்லங்கப்படுத்தக்கூடாது என உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தாவா சொத்துக்களைப் பொறுத்து பிரதிவாதிகள் தாவா சொத்தையும் அதனை உள்ளடக்கிய சொத்தையும் பொறுத்து கடந்த 20.08.1987 ம் தேதி பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் மூலம் கிரையம் கொடுத்துள்ளதாகவும், அதனடிப்படையில் தாவா

சொத்தை அனுபவம் செய்து வருவதாகவும், கடந்த 01.07.1992ம் தேதி மனுதாரருக்கு சரியான கிரைய தொகைக்கு கிரையம் கொடுத்து சொத்தையும் கைவச அனுபவத்தில் ஒப்படைத்து விட்டதாகவும், பின்னிட்டு 02.07.1992, 03.07.1992ம் தேதி கிரையம் கொடுத்த சொத்தையும் மனுதாரர் கைவச அனுபவத்தில் ஒப்படைத்து விட்டதாகவும், பின்னர் 08.11.1994ம் தேதி ஆவண எண்.878/1994 ஆவணம் மூலம் கிரையம் மூலமும், 07.01.2000ம் தேதியன்று ஆவண எண்.14/2000 மூலமும் கிரையம் பெற்றதாகவும் மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்மனுதாரர்கள் தரப்பில் இதற்கு மாறாக தாவா சொத்தைப் பொறுத்து பழைய சர்வே எண்.231ல் கண்ட புதிய சர்வே எண்.230/1எ என பிராதில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகளானது மோசடியாக சித்தரிக்கப்பட்டவை என்றும், சொத்தானது 1ம் பிரதிவாதி/1ம் எதிர்மனுதாரரின் தகப்பனார் இறந்து விட்ட நிலையில், அவரது வாரிசுகளான 7 நபர்களுக்கும் பாகம் பிரிக்கப்படாமல் 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி மட்டும் கிரையம் கொடுத்துள்ளது செல்லத்தக்கதல்ல என ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தாவா சொத்திற்கும் 01.07.1992ம் தேதி கிரைய சொத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றும், வாதியின் கைவச அனுபவத்தில் ஒப்படைத்ததாக ஆவண எண்.865/1994ல் கண்ட சொத்தானது சர்வே எண்.231/3A1ல் அடங்கியுள்ளதால் தாவா சொத்தைப் பொறுத்து எந்த வகையிலும் கட்டுப்படுத்தக்கூடிய ஆவணம் இல்லை என ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தெரிவித்துள்ளவாறு சர்வே எண்.231ல் கண்ட புதிய சர்வே எண்.230/1எ என்பதும் வெவ்வேறானவைதானா, 1ம் பிரதிவாதி/1ம் எதிர்மனுதாரரின் தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட நிலையில் அவரது வாரிசுகளின் 6 நபர்களை தவிர்த்து 1ம் பிரதிவாதி/1ம் எதிர்மனுதாரர் மட்டும் கிரையம் கொடுத்துள்ளார் என எதிருரையில் தெரிவிக்கப்பட்ட சங்கதிகளை நிரூபணம் செய்ய எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு வாய்ப்பு வழங்க வேண்டியது அவசியமாகிறது.

எதிர்மனுதாரர்கள் தரப்பில் செய்யப்பட்ட வாதத்தை ஒத்துரைக்கும் விதமாக எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்து வழக்கினை விசாரணை செய்யும்போதுதான் இருதரப்பிலும் முன்னிறுத்தப்பட்ட ஆவணங்களின்

உண்மைத்தன்மையையும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கூறியுள்ளதுபோல் மனுதாரர் தரப்பு ஆவணம் மோசடியாக ஏற்படுத்தப்பட்டதா என்பதும் இருதரப்பு சாட்சிகளையும் விசாரணை செய்தால்தான் தெரிய வரும் என்பதையும் இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

மனுதாரர் தரப்பில் மனு சொத்தின் உரிமையை நிரூபிக்கும் வகையில் அசல் வழக்குடன் வாதிக்கு பாத்தியப்பட்டதாக கிரைய ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தாலும், எதிர்மனுதாரர்கள் தரப்பிற்கு வாய்ப்பு வழங்க வேண்டிய கடமை நீதிமன்றத்திற்கு உள்ளது. மேலும் தாவா சொத்தில் மனுதாரர் அல்லது எதிர்மனுதாரர்களின் அனுபவத்தை ஆவணங்களின் அடிப்படையிலும், சாட்சியங்களின் அடிப்படையிலும் நிரூபிக்க வேண்டிய கடமை இருதரப்பிற்கும் உள்ளதால் மேற்கண்ட பிரச்சனைக்கான தீர்வினை இந்த மனுவில் தீர்மானிக்க முடியாது என்பதாலும், நீதியின் நலனை கருத்தில் கொண்டு மனுதாரர் கோரியுள்ள பரிகாரமானது மனுதாரருக்கு கிடைக்கக்கூடியதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவாக,**

**மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு 06.01.2026 இன்று அவையறிய பகரப்பட்டது.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.01.06 16:46:38 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி.

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சி</u> :** இல்லை

**<u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u> :**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | – | 20.08.1987 தேதி வாதி பிலவேந்திரன் வகையறாவிடம் கிரையம் வாங்கிய கிரைய ஆவணம் |
| ம.சா.ஆ.2 | – | 01.07.1992 தேதியிட்ட கிரைய ஆவணம் |

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.3 | - | 02.07.1992 தேதியிட்ட 1ம் பிரதிவாதிக்கு பிலவேந்திரன் அவர்கள் மனைவி அடைக்கலம்மாள் வகையறாவிடம் எழுதிக்கொடுத்த அதிகார ஆவணம் |
| ம.சா.ஆ.4 | - | 03.07.1992 தேதியிட்ட 1ம் பிரதிவாதி அலங்காரம் பர்னாந்து என்பவரிடம் அதிகார முகவர் எழுதிக்கொடுத்த 5 ஏக்கர் நிலத்தை கிரையம் வாங்கியதற்கான கிரைய ஆவணம் |
| ம.சா.ஆ.5 | - | 07.11.1994 தேதியன்று 4ம் பிரதிவாதி வகையறாவிடம் கிரையம் வாங்கியதற்கான கிரைய ஆவணம் |
| ம.சா.ஆ.6 | - | 08.11.1994 தேதியிட்ட தாவா சொத்தை 1 முதல் 6 பிரதிவாதிகள் கிரையம் கொடுத்த கிரைய ஆவணம் |
| ம.சா.ஆ.7 | - | 07.01.2000 தேதி வாதி கிரையம் பெற்றதற்கான கிரைய ஆவணம் |
| ம.சா.ஆ.8 | - | 13.04.1995 தேதி 1ம் பிரதிவாதியின் தகப்பனார் ராயப்பன் லியோன் என்பவருக்கு கிரையம் கொடுத்த கிரைய ஆவணத்தின் நகல் |
| ம.சா.ஆ.9 | - | சர்வே எண்.231/3B க்கு புனித அன்னாள் கல்வி கழகத்திற்கு ஏற்பட்ட பட்டா எண்.10286 கணிணி நகல் |
| ம.சா.ஆ.10 | - | சர்வே எண்.231 கான பட்டா (எண்ணம் 7) |
| ம.சா.ஆ.11 | - | சர்வே எண்.231/3A1, 58/2 க்கு வழங்கப்பட்ட பட்டா |
| ம.சா.ஆ.12 | - | சர்வே எண்.230/1A க்கான வில்லங்க சான்றிதழ் |
| ம.சா.ஆ.13 | - | 27.12.2021 தேதியன்று தாவா சொத்தை வாதி அனுபவம் செய்ததற்கான கிஸ்து ரசீது |
| ம.சா.ஆ.14 | - | பிராது வரைபடம் |

<u>**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி**</u> : இல்லை

<u>**எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்**</u> : இல்லை

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.01.06 16:46:42 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி.